# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
***********

முறையீட்டு மனு எண்: 386/2016/பே

ஆணை எண்: 218/2017

நாள்: 29/08/2017

**திருமதி . ஆர். சாந்தா,
க/பெ . முத்துச்சாமி,
13வது வார்டு உறுப்பினர்,
முளகுமூடு பேரூராட்சி,
கொட்ரவிளை, கோழிப்போர்விளை,
கன்னியாகுமரி மாவட்டம்.** — **முறையீட்டு மனுதாரர்**

**தலைவர்,
முளகுமூடு பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.** — **எதிர் மனுதாரர்**

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடு பேரூராட்சி 13–வது வார்டு உறுப்பினர் திரு. திருமதி ஆர்.சாந்தா, என்பவரின் 17.12.2014ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.1654/2015/ இ.2 நாள்: 22.04.2016 கடிதம் மூலம் 06.05.2016 அன்று பெறப்பட்டு 386/16 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி முறையீட்டு மனுதாரர் திருமதி ஆர். சாந்தா, முன்னாள் 13வது வார்டு உறுப்பினர், முளகுமூடு பேரூராட்சி தனது முறையீட்டு மனுவில் முளகுமூடு பேரூராட்சி முன்னாள் தலைவர் திருமதி ஜோஸ் கிரேஸ்லின் என்பவர் மீது பல்வேறு புகார்களை கூறியுள்ளார். வறுமைக் கோடு பட்டியலில் முறைகேடு, தகுதியற்ற சிலரை இப்பட்டியலில் சேர்த்தது, ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தலில் முறைகேடு, துப்புரவு பணியாளரகள் பணியமர்த்தலில் முறைகேடு பேரூராட்சி ஒப்பந்தத்தில் முறைகேடு என பல்வேறு முறைகேடுகள் செய்துள்ளதாக தெரிவித்து புகார் மனு சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.386/2016/பே/நாள்:10.05.2016ம் தேதியில் மேற்படி முறையீட்டு மனுதாரருக்கு, மனுவினை விதிகளின்படி உரிய முறையில் அனுப்பி வைக்குமாறு அறிவிப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினரும் முறையீட்டு மனுதாரருமான திருமதி சாந்தா என்பவர் நாளது தேதி வரை தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்கவில்லை.

இருப்பினும், மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை அனுப்பக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 386/2016/பே/நாள் 25.11.2016 ன்படி பேரூராட்சி செயல் அலுவலர், முளகுமூடு கோரப்பட்டார்.

பேரூராட்சி செயல் அலுவலர், முளகுமூடு தனது கடித எண்.247/அ.1/ நாள்: 21.12.2016ல் "...முளகுமூடு பேரூராட்சியில் **2006-2007-ம் ஆண்டில்** வறுமைக் கோட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டதாகவும் அதன் **எண்ணிக்கை 1597 எனவும்,** இதனை தொடர்ந்து இப்பட்டியலில் இருந்து எவரது பெயரும் நீக்கப்படவில்லை எனவும், **பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,** நாகர்கோவில் அவர்களின் கடித எண்.3119/2009/ப.3/நாள்:14.08.2009ன்படி முளகுமூடு பேரூராட்சியில் **65** வயதிற்கு **மேற்பட்ட 22 ஏழை மக்களை** வறுமைக் கோட்டில் சேர்க்க உத்திரவிட்டதின் அடிப்படையில் பேரூராட்சி மன்ற **தீர்**மான எண்:56/2010, **நாள்:05.03.2016ன்படி** மேற்படி நபர்களை வறுமைக் கோட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டதாக தெரிவித்துள்ளார், **கன்னியாகுமரி** மாவட்ட **ஆட்சியரின் கடித எண்.ஒ.1/23033/2012/** நாள்:07.08.2012-ன்படி இந்திரா காந்தி தேசிய முதியோர் ஒய்வூதியம் **பெறுவதற்கு 35 நபர்களை** வறுமைக் கோட்டு பட்டியலில் சேர்க்க

அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் முளகுமூடு பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.292/2012 **நாள்:31.10.2012-ன்படி** வறுமைக் கோட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்தாகவும், திட்ட பயனாளிகளை நீக்குவதற்கும் பேரூராட்சிக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியத்தினை கருத்தில்கொண்டும் பொதுமக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீராக விநியோகம் செய்யும் பொருட்டும் பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் சிறுமின்விசை திட்டங்களுக்கான மதிப்பீடுகள் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு திறந்த ஒப்பந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டதென தெரிவித்துள்ளார். பொறியாளரின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, உதவி செயற்பொறியாளரால் பட்டியல் மேலொப்பம் பெறப்பட்டபின் தொகை பட்டுவாடா செய்யப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முளகுமூடு பேரூராட்சியின் மொத்த பரப்பளவு 8.5 சதுர கிலோ மீட்டர் எனவும், 18 வார்டுக்குட்பட்ட பகுதிகளில் 66.52 கிலோமீட்டர் சாலைகளும் 7.9 கிலோமீட்டர் வடிகாலும் உள்ளதாகவும், பேரூராட்சியால் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருவதாகவும், இது முற்றிலும் தற்காலிகமான நடைமுறை எனவும், பொது சுகாதாரத்துறையின் அறிவுரையின்படி 4 டெங்கு மஸ்தூர்கள் முற்றிலும் தற்காலிகமாக பொது சுகாதார ஆய்வாளர் அவர்களின் மேற்பார்வையில் பணியுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சியின் அனைத்து ஒப்பந்த விளம்பரங்களும் ஒளிவுமறைவற்ற நடைமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஒப்பந்தபுள்ளி வரவழைக்கப்படும்போது ஒப்புகை அட்டையுடன் பதிவு தபால் மூலம் அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு வருவதாகவும், அனைத்து பணிகளும் பொறியியல் பிரிவின் மேற்பார்வையில் முறையாக மேற்கொள்ளப்பட்டு, வருவதாகவும் எந்த பணிகளிலும் முறைகேடு எதுவும் நிகழவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். அனைத்து பணிகளும் மதிப்பீடு மற்றும் வேலை உத்திரவு

உடன்படிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் முறையாக நடைபெற்று வருவதாகவும், ஒரு பணிக்கு ஒருமுறை மட்டுமே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பொறியாளர் பிரிவினரால் பட்டியல் தயாரிக்கப்பட்டு மேலளவு செய்யப்பட்டதின் அடிப்படையிலேயே தொகை பட்டுவாடா செய்யப்படுவதாகவும், அரசு நிதியோ, பொது நிதியோ தவறாக பயன்படுத்தப்படவில்லை எனவும் பேரூராட்சி மன்றக் கூட்டம் முடிந்தவுடன் மினிட் புத்தகத்தில் பதிவுகள் இறுதி செய்யப்பட்டு மன்றத் தலைவரால் ஒப்பமிடப்படுவதாகவும், கூட்டம் முடிவுற்ற பின்னர் எந்த பொருளும் சேர்க்கப்படுவதில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 386/2016/பே/ நாள்:25.11.2016 மற்றும் 20.12.2016 ஆகிய தேதிகளில் முறையீட்டு மனுதாரர் திருமதி ஆர். சாந்தா அவர்களின் நேரடி விளக்கம் பெற அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுதாரர் திருமதி ஆர். சாந்தா, தனது 21.12.2016 ம் தேதிய கடிதத்தில் இம்முறைமன்ற அமைப்பிற்கு வருவதற்கு தனக்கு போதுமான பணவசதி இல்லை எனவும் மேலும் தான் ஏற்கனவே அளித்த முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்களையே மீண்டும் குறிப்பிட்டு அதனை விசாரிக்க கோரி மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பணை எண்.386/2016/பே/நாள்:02.01.2017ல் பேரூராட்சி செயல் அலுவலர், முளகுமூடு அவர்களின் அறிக்கையினை திருமதி ஆர். சாந்தா, முறையீட்டு மனுதாருக்கு அனுப்பிவைத்து அதன் மீதான கருத்தினை 10 நாட்களுக்குள் தெரிவிக்க கோரியும் மேற்படி முறையீட்டு மனுதாரரிடமிருந்து எந்த விதமான அறிக்கையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

இம்முறைமன்ற நடுவ அமைப்பு கடித எண்.386/2016/பே/நாள்:24.12.2016ன்படி பேரூராட்சி செயல் அலுவலர், முளகுமூடு அவர்களின் நேரடி வாக்குமூலத்தினை பதிவு செய்யவேண்டி 08.02.2017 அன்று நேரில் ஆஜராக அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவ அமைப்பில் 08.02.2017 ம் தேதி ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"...தான் முளகுமூடு பேரூராட்சியில் 01.09.2015 முதல் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், முறையீட்டு மனுதாரர் 13வது வார்டு உறுப்பினராக இருந்தார் எனவும் அவரின் மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், முளகுமூடு பேரூராட்சியில் வறுமைக் கோட்டு கீழ் உள்ள பட்டியலில் பேரூராட்சியின் மூலமாக எந்த திருத்தமும் மேற்கொள்வதில்லை எனவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் மேற்படி பட்டியலை திருத்தம் செய்வதாகவும் வறுமைக் கோட்டு பட்டியலில் உள்ள பயனாளிகள் பட்டியல் இலவச அரிசி பெறுவதற்கு மட்டும் பட்டியல் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நபர்கள் உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள 4 நபர்களில் இருவர் குறித்து விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள நபர்களை விசாரித்து அதற்கான அறிக்கையினை ஒரு வாரத்தில் சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்தார்.

குடிநீர் வழங்குவதில் எவ்வித முறைகேடும் இல்லை எனவும், முறையாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருவதாகவும், பேரூராட்சியில் பதிவு செய்த பிளம்பர்கள் மூலமே குடிநீர் திட்டப் பணிகள் நடைபெறுவதாகவும் பேரூராட்சி அலுவலக பிளம்பர்களை வைத்து எந்த பணியும் செய்யப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

மேலும் முளகுமூடு பேரூராட்சியில் 50 நபர்கள் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்துள்ளதாகவும் அனைத்து ஒப்பந்தக்காரருக்கும், ஒப்பந்தபுள்ளி தபாலில் அனுப்பப்பட்டு அதன்பிறகே பெறப்படும் ஒப்பந்தபுள்ளிகள் ஒப்பந்தவிதிகளின் கீழ் வேலை நிர்ணயம் செய்யப்படுவதாகவும், குடிநீர் பணிகளுக்காக பழைய மோட்டார்களை வாங்கி புதிய மோட்டார்களாக கணக்கு காட்டுவதில்லை எனவும், வாங்கப்பட்ட அனைத்து மோட்டார்களும் தளவாடங்கள் பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்து மேற்பார்வை அலுவலர்களால் பதிவு செய்யப்படுவதாகவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார், டெங்கு மஸ்தூர் பணியாளர்களை பொது சுகாதரத்துறையினரே பணியமர்த்துவதாகவும், பேரூராட்சி நிர்வாகம் ஊதியம் மட்டுமே வழங்குவதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சி தலைவர் 6% கமிஷன் வாங்குகிறார் என்பதும்

அதில் பேரூராட்சி செயல் அலுவலர் பயனடைவதாக கூறுவதையும் மறுத்ததோடு ஒரு நபருக்கே அனைத்து பணிகளையும் வழங்குவதான புகாரையும் தனது நேரடி வாக்கு மூலத்தில் மறுத்து பதிவு செய்துள்ளார்."

இதனைத் தொடர்ந்து பேரூராட்சி செயல் அலுவலர், முளகுமூடு அவர்கள் ஏற்கனவே இம்முறைமன்ற நடுவ அமைப்பில் தனது நேரடி வாக்குமூலத்தினை பதிவு செய்த 08.02.2017ல் தெரிவித்தவாறு கூடுதல் விவரங்களை தனது கடித எண். 247/2016/அ1/நாள்: 18.07.2017ன் முலம் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"..முறையீட்டு மனுதாரரும், 13 வது வார்டு உறுப்பினருமான திருமதி ஆர் சாந்தா தனது மனுவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் உள்ள பெயர்கள் குறித்து நேரடி விசாணை மேற்கொண்டதாகவும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள நபர்கள் குறித்து விசாரணை மேற்கொண்டு உண்மையிலேயே வறிய நிலையில் உள்ளவர்கள் மட்டுமே வறுமைக் கோட்டுப் பட்டியலில் உள்ளதாகவும் கூடுதலாக எவர் பெயரும் பேரூராட்சியால் சேர்க்கப்படவில்லை எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.."

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரது மனு, முளகுமூடு செயல் அலுவலரின் விளக்கம் மற்றும் நேரடி வாக்குமூல பதிவு ஆகியவற்றினை பரிசீலத்ததில் முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் அனுப்பக் கோரி இம்முறைமன்ற நடுவ அமைப்பு மூலம் அறிவுறுத்தியும் அதனை பொருட்படுத்தாததோடல்லாமல் தான் அளித்த முறையீட்டு மனுவிற்கான எந்தவிதமான ஆதார ஆவணங்களும் அளிக்கவில்லை. மேலும் முறையீட்டு மனுதாரின் நேரடி விளக்கத்தினை பெற இம்முறைமன்ற நடுவ அமைப்பால் இரு முறை வாய்ப்பளித்தும் அதனை அவர் பயன்படுத்தாமல் கூடுதல் வாய்ப்பாக பேரூராட்சி செயல் அலுவலர், முளகுமூடு அவர்களின் விளக்கக் கடிதத்தின் மீது முறையீட்டு மனுதாரரின் குறிப்பு மற்றும் மறுப்புரையினை கோரியும் அதற்கும் முறையீட்டு மனுதாரர் எந்த பதிலும் அளிக்கவில்லை. எனவே மேற்படி முறையீட்டு மனுதாரர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கக் கடிதத்தின் மீது எவ்வித மறுப்புரையும்/குறிப்பும் அளிக்க விரும்பவில்லை அல்லது கூறிக்கொள்ள ஏதுமில்லை என இம்முறைமன்ற நடுவம் கருதுவதோடு, முளகுமூடு

பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தால் தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 1/9/17

பெறுநர்
திருமதி . ஆர். சாந்தா,
க/பெ . முத்துச்சாமி,
13வது வார்டு உறுப்பினர்,
முளகுமூடு பேரூராட்சி,
கொட்ரவிளை, கோழிப்போர்விளை,
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்
செயல் அலுவலர்,
முளகுமூடு பேரூராட்சி செயல் அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.